


தமிழ்

க.பொ.த.உயர்தரம்

சிறுகதை - கூத்து






பாத்திரப் பண்புகளும் பார்வைகளும் பதிவுகளும்

தொகுப்பாக்கம்

திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

(ஆசிரிர்,மட்.ககு - பால்சேனை தமிழ் மகா வித்தியாலயம், கல்குடா கல்வி வலயம்)

மிகமுக்கியம் : இங்கு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் சிறுகதையின் விடைக்குறிப்புக்கள் மிகுந்த உடல் உள உழைப்பில் நானும் எனது 2019 தொகுதி மாணவர்களும் சேர்ந்து தயாரித்த குறிப்புக்களாகும். இவற்யின் பதிப்புரிமையை மீறாமல் நாகரிகமாக மாணவர்களுக்கு சென்றடையச் செய்யுங்கள்.

சமர்ப்பணம்

என் கற்றல் கற்பித்தல் பணியில் என்னை வளர்த்த வளர்ர்த்துக்கொண்டிருக்கும் என் மாணவர்களுக்கு இதை சமர்பிக்கின்றேன்.

நன்றி:தரம்13 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி,வளநூல்,தேசிய கல்வி நிறுவகம்.

கற்றற்பேறுகள்

≈ 'கூத்து' என்ற சிறுகதையை வாசித்து, கிரகித்துப் பெற்ற அனுபவங்களைக் கூறுவர்.

≈ சிறுகதையானது எழுதப்பட்ட காலப்பின்புலத்தின் வாழ்வியற் கூறுகளைப் பிரதிபலிக்கும் தன்மையை இனங்கண்டு விளக்குவர்.

≈ 'கூத்து' என்ற சிறுகதையின் மையக்கருத்து, துணைக்கருத்துக்கள் என்பவற்றை விபரித்து எழுதுவர்.

≈ கதை கூறப்படும் பாங்கு, பாத்திரப்படைப்பு என்பவற்றினை விளக்கி எழுதுவர்.

≈ கதாசிரியர் கையாண்டுள்ள மொழிநடை பற்றியும் பொருத்தப்பாடு பற்றியும் விமர்சித்து எழுதுவர்.

கதாசிரியர் நவம்:

மட்டக்களப்பு ஆரையம்பதி என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நவம், ஆசிரியராகப் பணி புரிந்தவர். நாடகம், பயண இலக்கியம், நகைச்சுவைக் கட்டுரை போன்றவற்றை எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர். 'கல்கி' 1961 இல் இலங்கை எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியை நடத்திய போது ''நந்தாவதி" என்ற இவரது சிறுகதை முதற்பரிசைப் பெற்றது.

கூத்து சிறுகதை அறிமுகக் குறிப்புக்கள்:

- இயற்கைவளம் கொழிக்கும்மட்டக்களப்புவயற்காட்டுபிரதேசத்தையும், கோயில்வீதியில் அமைந்துள்ள கூத்துக்களரியையும் நிகழ்களங்களாகக் கொண்டு கதை உருவாக்கப்பட்டுள்ளது.
- காதலும், மோதலும், தன்னைமறத்தலும் கதையோட்டத்திற்கான கருப்பொருள்களாக விளங்கியுள்ளன.
- சரவணமுத்து, நாகாத்தை, நாகண்டான் ஆகிய மூன்று முக்கிய கதாப்பாத்திரங்களைச் சுற்றியே கதை பரவவிடப்பட்டுள்ளது. கதையின்திருப்புமுனை நிகழும் இடமாக கூத்துக்களரி விளங்கியுள்ளது.
- தன்னை மறந்த நிலையில் உணர்ச்சி வசப்பட்டு ஒருவர் செயற்படுவது 'தன்னை மறத்தல்'எனப்படும். இச்சிறு கதையிலும் நாகண்டானும் தன்னைமறந்து செயற்பட்டிருக்கிறான். தனது காதலனான சரவணமுத்துவுடன் வயற்காட்டில் இனிமையாக உரையாடி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த நாகாத்தையின் கையைப் பற்றி இழுத்துவிட்டான். நாகண்டான் ஏற்கனவே அவள் மீது ஒரு கண் வைத்திருந்த அவனது காமம் மீறிய செயல் இதுவாகும். அவனிடம் இருந்து ஒருவாறு கையை விடுவித்த நாகாத்தை, மீண்டும் திரும்பி ஓடி வந்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த சரவணமுத்துவிடம் விடயத்தைக் கூற, அவனும் நாளை நடைபெறும் 'சுபத்திரை கல்யாணம்'கூத்தின் போது நாகாண்டனுக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன். கூத்து முடிந்த பின் உன் கழுத்தில் தாலி கட்டுவேன் என்று ஏற்கனவே அவளிடம் அவன் கூறியிருக்கிறான்.
- அடுத்தநாள், கோவில் வீதியில் போடப்பட்ட கூத்துக்களரியும் பார்வையாளர் மிகுந்திருத்தலும், அண்ணாவியார், அவரது இசைக் கோஷ்டியினர் பபூனாகிய கட்டியக்காரன் ஆகியோரின் செயற்பாடுகளும், வெற்றி முழக்கத்தின் போது வெடிச் சத்தங்களுமாக மரவுவழி வந்த தமிழர் தம் கலை வடிவம் ஒன்றின் மகத்துவம் இச்சிறு கதையினூடு வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- 'சுபத்திரை கல்யாணம்' கூத்தில் உப காட்சியாக அருச்சுனன், சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெறுதல் அமைந்துள்ளது.கூத்தில் அருச்சுனனாக நடித்தவன் சரவணமுத்து. வேடனாக நடித்தவன் நாகண்டான். சிவபெருமானே வேடனாக வந்தார் என்பதும் , காட்டுப்பன்றி ஒன்றின் மீது இருவரும் சமகாலத்தில் விட்ட அம்புக்கள் பட்டு பன்றி இறக்கவே, இருவரும் அதற்கு உரிமை கொண்டாடும் பொருட்டு தமக்குள் சண்டை இட்டுக் கொண்டமை இதிகாச வரலாறு.

- இப்போது கூத்தில் விஜயனிடமிருந்து வேடன் தப்புவதும், விஜயன் வில்லால் அவனை அடித்து வீழ்த்தவும் செய்து விட்டான். இங்கே சரவணமுத்து, கூத்து என்பதை மறந்து, தன்னிலை மறந்து செயற்பட்டு விட்டான்.நாகாண்டான் மீதுள்ள தன் காதலி பற்றிய பகையுணர்ச்சியே இதற்கு காரணமாகி விட்டது.
- தன்னைக் கடுமையாக வில்லால் தாக்கிய விஜயனது பக்தியையும், வீரத்தையும் கண்டுணர்ந்த வேடன் உருவில் வந்த சிவன், அவனுக்கு பாசுபதம் அருளுவதாக இதிகாசக் கதை முடிகிறது. ஆனால் கோவில் வீதியில் நடைபெற்ற கூத்தில் விஜயனாக வந்த சரவணமுத்தின் கோபமீறிய தாக்குதலினால் நாகாண்டான் இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தான்.
- சிறு கதையின் முடிவு,நாகாண்டான் மரணமடைந்தான்; சரவணமுத்து கொலைக் குற்றவாளியானான்; நாகாத்தை தனிமரமானாள்: கண்ணீர்க்கடலில் விழுந்து விட்டாள். கூத்தின் முக்கிய மூன்று கதாப்பாத்தரங்களும் கூத்தின் நோக்கத்தை நிறைவு செய்யாமல், மாறான மூன்று கதாப்பாத்திரங்களாக மாறிவிட்டதைக் காணமுடிகிறது.
- கூத்துக்குள் ஒரு கூத்து நடந்து துன்பியலாக முடிந்து விட்டதைச் சிறு கதையில் கண்டுணர முடிகிறது.

நவத்தின் கூத்து கதைச் சாரம்சம்

- நவம் எழுதிய கூத்து என்னும் சிறுகதை 'சரணவமுத்துவைப்' பிரதான கதாபாத்திரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் கோயில் திருவிழாக்களில் இரவு வேளைகளில் புராண இதிகாசக் கதைகளில் நாடகத் தன்மைகளைக் கொண்ட காட்சிகளை நாடமாக நடித்துக் கொள்வது ஓர் உயர்ந்த மரபாக இருந்துள்ளது.
- நாடகத்தில் நடிக்கும் கதை மாந்தர்கள் கதையில் காணப்படும் பாத்திரங்களைப் போல நடித்துக்காட்டுவார்கள். இத்தன்மையை 'ஆள்மேற்கொள்ளுதல்' என்பார்கள். இவ்வாறுதான் இச்சிறு கதையிலும் அர்ச்சுணன் பாசுபதம் பெறுகின்ற புராணக் கதையினை நாடகம் போலச் செய்தார்கள்.
- தம்முடைய நிலையை மறந்து பழி தீர்க்கும் ஒரு களமாக நாடகத்தினை பயன்படுத்தியமையினை இக்கதை கூறுகின்றது. சரவணமுத்துவே கதையின் பிரதான பாத்திரமாகவும் கூத்தின் பிரதான நடிகனாகவும் காணப்படுகின்றார். சரவணமுத்து, நாகத்தை,நாகண்டாப்போடி என்னும் பாத்திரங்கள் கதையில் முக்கிய இடம்பெறுகின்றன.
- சரவணமுத்துவும், நாகாத்தையும் காதல் ஜோடியாவும் நாகாண்ட போடி, நாகாத்தையை காதல் செய்யும் முயற்சியில் அவளோடு தொடர்ச்சியாக கதைத்துக் கொண்டு வருகின்றான்.இதனை சரவணமுத்துவிடம் பலமுறை எடுத்துரைத்துள்ளாள். சரவணமத்துவும் நாகண்டனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என எண்ணிக் கொண்டு இருந்தான்.
- ஆலயமொன்றில் 'சுபத்திரைகல்யாணம்' என்னும் நாடகத்தில் அருச்சுனன் சிவனிடம் பாசுபரம் பெறும் காட்சி நாடகமாக நடிப்பதற்கு சரவணமுத்து அருச்சுனனாகவும் நாகாண்ட போடியார் வேடனாகவும் நடிக்கவுள்ளனர். இந்நிலையில் நாடகம் இரவில் மேடையேறவுள்ளது.
- சரவணமுத்துவோடு நாகாத்தா ஒன்றாக கதைத்து விட்டுச் சென்றவள், சிறிது நேரத்தில் தலைதெறிக்க ஓடி வந்தாள். ஏன் என்று கேட்க அந்தப் பொறுக்கி இவ்வளவு நாளாக வாய்ச்சேட்டையோடு அந்த வழிசல் விட்டிருந்திச்சு இப்ப கையை புடிச்சி இழுக்கிற மட்டில் வந்திட்டுது என்றாள். இவனிற்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்னும் உணர்வுகளுடன் சரவணமுத்து இருந்தான்.
- கோயிலில் நாடகம் மேடையேறுகிறது. சரவணமுத்து அர்ச்சுனனாக வேடம் ஏற்று சிவனை நினைந்து தியானத்தில் இருந்தான். இதனை குழப்புவதற்காக ஒரு பன்றி வந்து, தீண்டியது இதனால் ஓர் அம்பினை எய்து பன்றியை மாய்த்தான். அதே சமயத்தில் வேடனும் அம்பினை விட்டான். இதனால் இருவருக்கும் இடையில் பெரும் முரண்பாடு ஏற்பட்டு இறுதியில் கைகலப்பில் ஈடுபட்டனர்.

அர்ச்சுனனான சரவணமுத்து வேடனான நாகாண்ட போடியாரைக் குத்தினான். ரெத்தம் களறியில் பாய்ந்தது, அர்ச்சுனனான சரவணமுத்து 'குற்றவாளியாக' புதிய பாத்திரத்தை ஏற்கின்றான்.

கூத்து சிறுகதையின் உள்ளடக்கம்:

- சரவணமுத்து, நாகாத்தை இருவரும் மனமொதத் காதலர்கள் நாகாத்தையைத் தகாதமுறையில் அடைய முற்படும் நாகண்டாப் போடி சரவணமுத்துவால் கொலை செய்யப்படுகிறான். இறுதியில் அனைவரும் துன்பத்தையே அனுபவிக்கிறார்கள். (உணர்ச்சி வசப்பட்ட நடவடிக்கைகளின் பயன் துன்பமே என்பது கதையூடு வலியுறுத்தப்படுகிறது)
- தன் காதலி நாகாத்தையை வயற்காட்டில் சந்தித்து அவளுடன் உரையாடி அவளுடைய அழகில் மயங்கி கிறங்கிப்போன சரவணமுத்துவின் தெம்மாங்குப்பாடலுடன் தொடங்குதல்.
- கூத்துக்களம் நினைவுபடுத்தப்பட்டு சுபத்திரை கல்யாணத்தில் வேடனாக வரும்வில்லத்தனமுடைய நாகாண்டாப்போடி பற்றிய விபரிப்பு.
- நூகாத்தை அவலக்குரல் எழுப்புவதும் அதற்கான காரணத்தையும் சித்திரித்தல்.உச்சக்கட்டமான உந்துக் களத்தில் அர்ச்சுனனான சரவணமுத்து வேடனான நாகாண்டாப் போடியை கொலை செய்வதாகக் கதையை முடித்தல்.

கூத்து சிறுகதை அறிமுகம்:

- கதைக்களம், செழிப்பான வயல்கள் நிறைந்த கிராமம், மண்வெட்டி பிடித்து வியர்வை சிந்தி உழைப்பதும், தெம்மாங்கு இசைப்பதும் கூத்துக்களரியில் வேடமிட்டு ஆடுவதும் என அந்தக் கிராமிய வாழ்விலே ஊறித் திழைக்கும் கதைமாந்தர், தமது பாரம்பரியக் கலைமரபுகளை, வாழ்க்கையாகவே வரித்துக் கொண்ட 'வெள்ளந்தி மனிதர்கள்!' நாகாத்தையை திருமணம் புரிந்து வாழ விரும்பும் சரவணமுத்துவும், அவளைத் தகாதமுறையில் அடைய விரும்பும் நாகண்டாப் போடியும் இரண்டு முரண்நிலைப் பாத்திரங்கள். இவர் மூவரிடையேயும் கதை நகர்கின்றது.
- அண்ணாவியார், கூத்துக்கலைஞர்கள் என சில உபபாத்திரங்கள் காணப்படுகின்றன. 'சுபத்திரை கல்யாணம்' நடக்கும் கூத்து மேடையிலே, வேடனாக வந்த நாகண்டானை, அர்ச்சுனனாக வரும் சரவணமுத்து உண்மையாகவே கொன்று விடுகின்றான். ''கூத்துக்களரி இரத்தக்களரி ஆயிற்று'', ஓர் உணர்வுநிலை - ஒரு சம்பவம் - ஒரு புனைவு!
- உலகம் ஒரு நாடகமேடை, நாமெல்லாரும் நடிகர்கள் என்னுமாற் போல,கதை கூத்துக் களரியையும் கூத்துக் கலைஞர்களையும் சுற்றிப் பின்னப்பட்டுள்ளது.
- கதைக்கேற்ப கிராமியமொழிநடை அதிலும், கூத்துப் பாரம்பரியத்திற்கே உரிய அச்சொட்டான சொல்லாடல்கள் சுவைக்கின்றன.'மத்தளம்' கம்பீரமாகப் பேசியது' என்றும் அண்ணாவியார் 'தாளக்கட்டை'வைக்கின்றார். என்றும் எழுதி,எம்மையும்'ரசிககோடி'களாக எழுத்தாளர் உருமாற்றி விடுகின்றார்.
- தன் கையை பிடித்திழுத்த நாகண்டானை,''நாசமறுவான்'',''புறக்கி'' (பொறுக்கி) என நாகாத்தை வசைபாடுவது, நாகண்டான் 'நிறகலை'யில் கிடப்பது, கட்டியக்காரனுக்கு அவனது நண்பர்கள் 'அம்பாரை' யை ஊற்றிக்கொடுப்பது என வாசகரைக் கிராமத்து மண் வாசனையில் புரட்டியெடுக்கின்றார். எழுத்தாளரின் பண்பாட்டுச் செழுமை மிக்க இந்தப் பரிபாஷைகள், இப்புனைவின் மிகப்பெரிய பலமாக அமைந்துவிடுகின்றன.
- கதை எவ்வித செயற்கை தன்மையும் இல்லாமல் வாசகரை தன்னுடன் கூடவே அழைத்துச் செல்கின்றது. கதையை இயல்பாக வளர்த்துச் செல்லும் பாங்கும், தீட்டித் தீட்டி மெருகேறிய மொழிநடையும் அதற்கு துணை போகின்றன.

- கதையின் உச்ச கட்ட நிலையில் கூத்து மேடை கலைய வேஷங்களும் கலைகின்றன. நாகண்டாப் போடி,'மனித வேசத்தை' களைகின்றான்.சரவணமுத்து,'குற்றவாளிவேசத்தை'ப்போடுகின்றான். நாகாத்தை,'கண்ணீர் நிறைந்த வேசத்தை'ப் போடத் தயாராகின்றாள். அவளது நாளைய வாழ்வு என்னவாகும்? அவளுக்கு இச்சமூகம் ஆதரவுக்கரம் நீண்டப்போகின்றதா? அல்லது பெண்ணின் இருப்பைச் சிக்கலாக்கப் போகின்றதா? என வாசகர் மனதில் அடுக்கடுக்கான கேள்விகளை எழுத்தாளர் நிரப்பிவிடுகின்றார்.
- சமகாலத்துப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுடன் இவை ஒத்திசைவதை எமது மனம் புரிந்து கொண்டு பரிதவிக்கின்றது, சமூக மாற்றத்தைக்காண விழைகின்றது. தன்னை மறந்த நிலையில் நிகழ்த்தப்படும் கூத்து, இப்போது எம் மனக் களரியில் அரங்கேறுகின்றது.

கூத்து சிறுகதையின் மையக்கருத்து:

கலைகளுடன் தொடர்புடையவனான கலைஞன் மென்மைத்தன்மை மிக்கவன். நுண்ணிய உணர்வின் அடிமையாகக் காணப்படுபவன் நல்லுணர்ச்சியை வெளிக்காட்டக் கூடியவன். ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலையால் வன்மைத்தன்மை கொண்டவனாக மாறிவிடுகிறான். குரூர உணர்ச்சிக்குள்ளாகிறான். 'குரூர உணர்ச்சி துன்பத்தையே தரும்' என்பதனை வலியுறுத்துவதாகக் 'கூத்து' க் கதை அமைகிறது. கூத்துக் களரியினூடாக கதை நகர்வதால் 'கூத்து' என்கிற தலைப்புப் பொருத்தமுற அமைகிறது.

சிறு கதையில் ஆசிரியர் கூறும் விடயம் :

பொது நிகழ்விற்கு தயார் செய்யப்பட்ட சமயக் கருத்துக்கள் நிறைந்த கதையினை நாடகமாக நடிக்கும் போது, தனிப்பட்ட உணர்வுகளால் விரோதங்களை வளர்த்துக் கொள்வதும் உணர்ச்சி வசப்படுவதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி பழிவாங்கி தானே குற்றவாளியாக மாறும் தன்மையினைக் கூறுகின்றார்.

கூத்து சிறுகதையின் சிறப்பியல்புகள்:

- 'கதை சொல்லல்' என்ற சொல்லாடல், பொதுவாக வாய்மொழி மரபையே சுட்டி நிற்பதாகும். அம்மரபின் நீட்சியாக, சிறுகதை எனும் வடிவத்தின் வரவும் படிமுறை வளர்ச்சியும் காரணமாக, அது இன்று நம்மிடையே புனைவிலக்கியத்தின் முக்கியமானதொரு கூறாக நிலைபெற்றுவிட்டது.
- இலக்கிய இரசனை என்பது, தனிமனித உணர்வு சார்ந்தது. அதனை நெறிப்படுத்தவென சில கோட்பாடுகளை முன் வைக்கலாமே ஒழிய, 'இரசனை'க்கு ஒரு வடிவத்தை வரையறுத்தல் சாத்தியமானதன்று. அவ்வாறே, 'சிறுகதைகளும்' ஒரு சட்டகத்துள் அடங்கிப் பிறப்பன அல்ல, சிறுகதைகள், தமக்கென வகுக்கப்படுகின்ற இலக்கணத்தை, பலசமயங்களில் மீறி நிற்பதைக் காண்கின்றோம். படைப்பாளியின் ஆளுமை வீறுகொண்டு எழுகையில், சிறுகதைகள், தமக்குப் பொருத்தமான வடிவங்களைத் தாமே 'தகவமைத்து'க் கொள்கின்றன. 'கூத்து' என்கின்ற இச்சிறுகதையும், அவ்வாறான 'சுயம்புவாகவே' தன்னை வெளிப்படுத்தி நிற்கின்றது.
- தனிமனித உணர்வுகள், அனுபவங்கள் என்பன உணர்ச்சிக் கொந்தளிப்புடன் புனையப்படுகையில், அவை வாசகனின் மனதுக்கு மிக நெருக்கமாக அமைந்து விடும். அதற்கும் அப்பால் சமூகத்தின் ஒரு வெட்டுமுகத்தை-இருப்புக்கான இடையறாத போராட்டத்தை, எம் கண்முன் நிறுத்தும் 'கூத்து', படைப்பின் நோக்கை மிகவும் அண்மிக்கின்றது.

- பேராசிரியர் கா.சிவத்தம்பி,''சிறுகதை என்பது, ஓர் உணர்வு நிலையை அல்லது மனதைத்தொடும் ஒரு பிரச்சினையை அடிநாதமாகக் கொண்டு எழுதப்படுவது'' என்றார். இப்புரிதலின் வழி, 'கூத்து' சிறுகதையை நாம் நோக்கலாம்.

ஆசிரியர் தான்கூறும் விடயத்தை வெளிப்படுத்தும் விதம் - சித்திரிப்பு முறை:

≡ கூத்து நிகழ்வு ஒன்றினை கூறுவதன் மூலம் புராண இதிகாசக் கதைகளை கையாண்டு நாடக நிகழ்வொன்றின் ஆற்றுகையின் மூலமும் இலகுவான மொழி நடையினை கையாண்டும் கதையினை நகர்த்தியும்,

≡ தனிப்பட்ட மனிதர்களின் முரண்பாடுகளை கூறுவதன் மூலம் பொது விடயத்தில் தனிப்பட்ட கோபத்தினை தீர்த்துக்கொள்வதன் மூலமும்,

≡ சம்பவ விபரிப்புக்களின் மூலமும் உவமைத்தொடர்கள், அணிகள், வர்ணனைகள் என்பவற்றினை கையாண்டும் தன் கருத்தினை வெளிப்படுத்துகின்றார்.

- சிறந்ததொரு சிறுகதைக்குரிய பண்புகளான குறைவான கதாப்பாத்திரங்கள் இடம்பெறல், ஆர்வமூட்டும் கதைத் தொடக்கம், அழகான வருணனைகள், உணர்ச்சிச் செறிவு, கதைக்கருவை விட்டகலாத செல்நெறி,கட்டிறுக்கமான கதை சொல்லலும் மொழியாழுகையும், பொருத்தமான திருப்புமுனை, உணர்ச்சிப் போராட்டம், வியப்பான முடிவு, ஏற்கத்தக்க சிறுகதையின் அளவு முதலானவை அமைந்திருத்தல்.
- நாடகபாணியில் கதையை நகர்த்துதல்:குதூகலமாகக் கதையைத் தொடங்கி, அழகியல் சார்ந்த சித்திரிப்புகள் ஊடாகக் கதையை நகர்த்திச் சென்று, அவலத்தோடு கதை நிறைவுறுகிறது.
- பொருத்தமான இருகளச் சித்திரிப்பு: வயற்காட்டின் சித்திரிப்பு, கூத்துக்களரியின் சித்திரிப்பு.
- 'கூத்து' என்ற தலைப்பினைப் பொருத்தப்பாடாக அமைத்தமை: கூத்துக் களரியினூடாக கதை நகர்வதால் 'கூத்து' என்கிற தலைப்புப் பொருத்தமுற அமைகிறது. நேரடிப் பொருளில் கூத்து என்ற கலை வடிவத்தினூடாகச் 'சுபத்திரை கல்யாணம்' விவரிக்கப்படும் அதேவேளை கூத்தாக அமையும் நடைமுறை வாழ்க்கையையும் மறைமுகமாக இணைத்துக் கதை கூறும் உத்தி.
- கூத்து என்பது நடைமுறையில் கலைவடிவம் என்ற கருத்தைத் தாண்டி அபத்தம்,அவலம்,அசாதாரணம், ஆகிய கருத்துக்களையும் உடையது. (ஊதிக்கூத்து,ஆரியர் கூத்து, சரியான கூத்து த்தான்) இந்தக் கதையின் முடிவும் கூத்தாக (அவலமாக) முடிவதை மறைமுகமாகக் கூறல். (கதை முடிவில் ஆசிரியர் கூற்று)
- **கதையில் ஆசிரியரது இடையீட்டு உத்தி முறைமையினைப்பயன்படத்தல்:**

  இடையீடு (1): கதையின் ஆரம்பம்: 'தன்னை மறத்தல்' என்பது பெரிய சங்கதிதான். தன்னை மறந்த நிலையில் ஒருவர் செய்கின்ற செயலும் பெரிய சங்கதிதான். (வ.வே.சு.ஐயரின் 'சூசிகை' போல ஆரம்பம்)உதாரணம் : மங்கையர்க்கரசியின் காதல்.

  இடையீடு (2): இறுதிக் கூற்று: நாகாண்டப் போடி உலக மேடையில் கூத்து ஆடுவதற்காகத் தான் போட்ட 'மனித வேஷத்தை'க் கலைத்துவிட்டு இந்த உலகத்தையே விட்டுச் சென்றுவிட்டான் உலகமேடையில் கூத்தாடுவதற்காகப் புதிதாக ஒரு வேஷத்தை போட்டுக்கொண்டு நின்றான் சரவணமுத்து! அவன் எற்க இருக்கும் பாத்திரம் குற்றவாளி!நாகாத்தையும் கூத்தாட தயாராகிக்கொண்டுதான் இருக்கிறாள்.அவள் ஏற்க இருக்கும்பாத்திரம்-கண்ணிர் நிறைந்தது!.மகாபாரதக் கதையில் வரும் கீசகன் வதை போலவே இக்கதையும் அமைந்துள்ளது.

- **பொருத்தமான சித்திரிப்புத்திறன்:**

  = நாட்டார் பாடலூடாகக் கதையை ஆரம்பித்தல். (பேச்சுமொழி)

  = நாகாத்தை வயற்களத்திற்குவந்துசெனற் காட்சியை நினைப்பது (அழகியல்)

  = கதை சொல்லியாக வரும்போது தராதரத் தமிழ் நடைப் பிரயோகம்.

  = உரையாடலில் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்ப் பிரயோகம்.

- காதலும், மோதலும் முக்கியமான கருப்பொருள்களாய் இருப்பினும், அவற்றை பொருத்தமான கதை நிகழ்களத்தின் ஊடாக (கூத்துக்களரி) சித்திரித்தல்.
- 'தன்னிலை மறத்தல்' ஆகிய உணர்ச்சி நிலையின் விளைவை கதையின் முடிவு நிலையின் ஊடாக வெளிப்படுத்தி, சிறு கதையின் கதை சொல்லியாக கதாசிரியரே விளங்குதல்.
- மட்டக்களப்பு பிரதேச பண்பாட்டுக் கூறுகளான,வயற்காடு, தெம்மாங்கு இசைத்தல், உணவுப்பழக்கங்கள், நாட்டுக்கூத்து, இயற்கை காட்சிகளுக்கு ஏற்ற நடத்தைகள் என்பவற்றை கதையோடு இயல்பான முறையில் பின்னிப் பிணைத்திருத்தல். மட்டக்களப்பு பேச்சு வழக்குச் சொற்களையும், வடசொற்களையும்,ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தியமை.
- பொருத்தமானதும், மொழியழகு மிக்கதுமான வருணனைகளைப் பயன்படுத்தியிருத்தல்.

≡ "இனிமையானவைகறைப் பொழுதாலோ; வயிற்றைக் குழுமையாக நிறைத்திருந்த'தண்ணிச்சோற்றாலோ'வலுவான வேலை செய்ததால் ஏற்பட்ட'தெம்பாலோ'மட்டும் அவனுக்கு இந்த உற்சாகம் ஜனிக்கவில்லை."

≡ "சுழியிற் புதைந்த அவளுடைய ஒவ்வோர் அடியும்....'பாடு! பாடு!'என்று பதிலளித்தன"

≡ "சற்று முன்னர் சரவணமுத்து அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி, அவள் உள்ளத்தில், வளர்ந்து வரும் கதிர்பறியா வேளாண்மைப் பயிர் போல் பசுமையாக தலையசைத்துக் கொண்டிருந்த வயல்வெளிக்குச் சற்றுத் தள்ளிக் காணப்பட்ட பச்சைக் காட்டின் மத்தியில் ஒரு கூட்டம் தென்னை மரங்கள். வயல் நீரில் தத்தித் திரிந்த 'பனையான்'விரால் மீன்களைக் கொத்தித் தின்ன எங்கிருந்தோ ஒரு கூட்டம் கொக்குகள் பிரையத்தனம் செய்து கொண்டிருந்தன."

கூத்து சிறுகதையின் கதாப்பாத்திர சித்திரிப்புக்கள்:

(அ) <u>சரவணமுத்து</u>:

- வைகறைப் பொழுதில் வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் இளைஞன். ஆஜானுபாவனான தோற்றமும், வயல் வேலையில் ஈடுபட்டு உறுதியாக உழைக்கும் ஆற்றலும் உடையவன். இசை நேர்த்தியுடன் இனிமையாக தெம்மாங்கு பாடுபவன்.கதையில் தெம்மாங்குப் பாட்டுடன் அறிமுகப்படத்தப்படுபவன்.
- நாகாத்தையை அதிகமாய் நேசிப்பவன்:அவனது காதலி நாகாத்தை. வயற்காட்டில் அவளுடன் இனிமையாக உரையாடியவன். அவள் வீட்டுக்கு திரும்பிச் செல்கையில் வயல் சேற்றுச் சுழிகளில் கால் புதைத்துச் செல்லும் அழகை இரசித்துப் பாத்தவன். அவளது அங்க இலாவணியங்களையும், நடையின் ஓய்யாரத்தையும் கண்டு மனம் கிறுகிறுத்தவன்.
- அடுத்த நாள் நடைபெறவிருக்கும் 'சுபத்திரைக் கல்யாணம்'கூத்தின் நடிக்கும் விஜயன் வேடத்தை நிஜத்தில் தன்னை விஜயனாகவும் நாகாத்தையை,சுபத்திரையாகவும் கற்பனை செய்து பார்த்தவன்.
- தனிநபர் என்ற வகையில் சுய விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்ற கலையை தவறாக உபயோகித்தவன்.

- நாகண்டான் நாகாத்தை மீது கொண்டிருக்கும் மையலையும், அவனது வாயிலிருந்து வீசும் சாராய வாசனையையும் நினைத்து வெறுத்து அருவருப்பு அடைந்தவன்.
- அவனது செயல் குறித்து நாகாத்தை கூறிய போது நாளை கூத்து முடிந்த பின்னர்,''இந்தச் 'சுபத்திரைக்கும்' தாலி கட்டுகிறான் இந்த'அருச்சுன' மகராஜன்'' என பெருமிதத்தோடு கூறியவன்.
- நாகாத்தை தனது கையை நாகண்டான் பிடித்திழுத்த விடயத்தை திரும்பி ஓடி வந்து கூறிய போது எற்பட்ட கடுங் கோபத்தை, மறுநாள் கூத்தின் போது தனக்கும் அவனுக்கும் 'பன்றி' உரிமை கோரி நடக்கும் போரில், நாகண்டானை நிஜமாகவே கடுமையாக தாக்கி பதிலடி கொடுக்கத் தீர்மானித்தவன்.
- நாகாண்டாப்போடி நாகாத்தையை விரும்புவதை அறிந்து அவனைவெறுப்பவன்.நாகாண்டாப்போடி நாகாதையிடம் வரம்பு மீறும்போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவனைக் கொலைசெய்யத்துணிந்தவன்.
- தன்னிலை மறந்து எதிர்பாராத கடுந்தாக்குதலில் நாகண்டான் இறந்து விட குற்றவாளியாக நின்றவன். தன் காதலியின் துன்பத்திற்கும் காரணமானவன். சரவணமுத்துவின் 'நெஞ்சக்களரி' யில் நடக்கும் கூத்து அல்லவா அது!
- கூத்துக்கலையில் வல்லமை உடையவன்:கூத்து மேடையினை, தன் காதலியின் மானம் காக்கும் மேடையாக உணர்ந்து தன்னிலை மறக்கின்ற வெறி கொண்ட கலைஞனாக சரவணமுத்து! எழுத்தாளர் சிறுகதையின் ஆரம்பத்தில் சுட்டுவது போல 'தன்னை மறத்தல்' எனும் 'உன்மத்த நிலை'யில் அவன் உண்மையாகவே அர்ச்சுனனாகி விடுகின்றான்.

(ஆ) நாகாத்தை

- **அறிமுகம்**:விவசாயக் கிராமமொன்றின் பண்பாட்டோடு இணைந்த அழகு வாய்ந்த இளம் பெண். இவளது அன்புக்குரிய காதலன் சரவணமுத்து.
- **வசீகரத்தோற்றம் கொண்டவள்**: தளிர்மேனி, கைவாழைக்குருத்து, லாவக நடை,எதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள்,முக்காடு,பாதிவயிறு வெளியில் தெரிவது.

- **பாலியல் சேட்டைகளுக்கு இடங்கொடாது அவற்றுக்கெதிராக கோபப்படுபவள்**: வயற் காட்டில் அவனுடன் உரையாடி விட்டுத் திரும்புகையில் தன்மீது ஒருதலையாகக் காதல் கொண்டிருந்த நாகண்டான் கையைப் பிடித்திழுக்கத் திமிறி விடுவித்துக்கொண்டு ஓடிச்சென்று சரவணமுத்துவிடம் நடந்தவற்றைக் கூறியவள். அத்தோடு நாகண்டான் தனது கையைப் பிடித்திருந்தபோது அவளது இயல்பில் மாற்றங்கள் தோன்றியமையையும் ஆசிரியர் சுட்டிக்காட்டல்:கைமட்டுமா சிவந்தது(கோபத்தாலும்,வெறுப்பாலும் அருவருப்பாலும்,பயத்தாலும்)கண்களும்தாம்.இவற்றிலிருந்து இவள்,நாகாண்டாப் போடியின் தகாத நடத்தைகளை வெறுப்பவளாகவும் விரும்பதத் காத நாகாண்டாப் போடியை எதிர்க்கும் துணிவுடையவளென்பதும் புலப்படும்.

- **தற்காத்துக்கொள்வதில் பக்குவமுடையவள்**:நாகண்டாப்போடியின் செயலை கண்டித்து தன்காதலனிடம் கூறுகிறாளே தவிர, சம்பவ இடத்தில் நாகண்டானிடம் வன்மையான வார்த்தைகளைக் கூறி பிரச்சியையைப்பூதாகரமாக்காமல் சாதூரியமாக அவ்விடத்திலிருந்து தப்பித்துக் கொண்டாள்.

- **சரவணமுத்**துவின் உறுதியை விரும்புவதுடன், அவனின் தெம்மாங்குப் பாடல்களையும் தனக்குள் விரும்பி முணுமுணுத்துக்கொண்டவள்.
- கூத்து முடிந்த பின் சரவணமுத்து தனக்குத் தாலி கட்டுவதாக கூறியதைக் கேட்டு மகிழ்ந்தவள். கூத்தின் முடிவில் கண்ணீர் நிறைந்த கதாநாயகியானாள்.

- சரவணமுத்துவை தன் வாழ்க்கைத் துணையாகக் விரும்புபவள்.அவனது அன்பிற்குப் பாத்திரமானவள்.

(இ) நாகண்டான்:

- சரவணமுத்துவின் காதலியான நாகத்தையை ஒருதலையாக விரும்பியவன்.
- மது போதையில் தன்னை மறந்து செயற்படுபவன்,பெண்ணிடம் பாலியல் சேட்டைகள் பண்ணியவன்.
- கூத்துக்கலையில்ஈடுபாடுள்ளவன்: 'சுபத்திரைக் கல்யாணம்' கூத்தின் உப காட்சியான 'சிவன் பாசுபதம் அளித்தலில்' வேடனாக நடித்தவன்.
- வயற்காட்டில் தனது காதலுனுடன் உரையாடிவிட்டு திரும்பிய நாகாத்தையின் கையைப் பிடித்து இழுத்தவன்.இதனால் நாகாத்தையால் புறக்கி,வழிசல்,போன்ற அவதூறான சொற்களால் திட்டப்பட்டு பின்பு நாகாத்தையின் காதலன் சரவணமுத்துவின் கடுங்கோபத்திற்கும் ஆளானவன்.
- கூத்துக்களரியில் தன்னிலை மறந்த சரவணமுத்துவின் வில்லால் தாக்கப்பட்டு உயிர் துறந்தவன்.
- நாகாண்ட போடியின் சுருக்கமான ஆனால் 'சுருக்' கென்ற அறிமுகம். காலகாலமாக ஆண் மேலாதிக்கச் சிந்தனையின் வழி வந்தவனாக, அவனைக் காண்பிக்கின்றது. களரி மேடையில் சுவாரசியமான நிகழ்வுகள், கதையோட்டத்துடன் இயைந்து சுவையூட்டுகின்றன.

சரவணமுத்து நாகாத்தை ஆகிய இருவருக்குமிடையிலான காதல் உணர்வு வெளிப்படுத்தப்படுமாறு:

= நாகாத்தையின் நினைவில் தன்னை மறந்த உணர்ச்சியோடு சரவணமுத்து பாடியமை.''வரம்போ தலைகாணி..."

= இவ்வுணர்ச்சி வெளிப்பாடு ''இனிமையான வைகறைப் பொழுதாலோ வயிற்றைக்குழுமையாக நிறைத்திருநத் 'தண்ணீர் சோற்றாலோ, வலுவோடு வேலை செய்ததால் ஏற்பட்ட தெம்பாலோ மட்டும் அவனுக்கு இருந்த உற்சாகம் ஜனிக்கவில்லை."அது நாகாத்தை சற்று நேரத்துக்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில்''பெய்துவிட்டு கெண்டைக்கால் வயற்சுழியில் புதையப் புதைய லாவக நடைபோட்டுச்சென்றிருந்தாள் எனக் குறிப்பிடப்படுவது.

= நாகாண்டப் போடி – நாகாத்தை மீது காதல் கொள்ளும் விவகாரத்திற்கு ஒருமுற்றுப்புள்ளி போட வேண்டும் எனும் எண்ணம்.

= நாகாண்டப்போடியின் விவகாரத்தை நினைவுபடுத்தி விரைவில் அதற்கு முடிவுகட்ட வேண்டுமென நாகாத்தை சரவணமுத்துவைக் கேட்டுக்கொள்ளல்.

= வயற்காட்டிலிருந்து திரும்பிவரும் நாகாத்தையின் செயற்பாடுகள்:சரவணமுத்து பாடிய தெம்மாங்கில் தன் மனதைப் பறிகொடுத்தாள், இடையிடையே தன்வாய்க்குள் ''தெம்மாங்கின் அடிகளை முணுமுணுத்தமை"

= சரவணமுத்து நாகாத்தைக்காக - நாகாண்டப்போடியைக் கூத்துக்களரியைச் சாதகமாக்கிக் கொள்ளுவது.

சரவணமுத்துவின் காதலைச் சொல்ல நவம் கையாளும் உத்திகள்

- **கதாசிரியரே படர்க்கை நிலையில் கதை செல்லியாக கதையை நகர்த்தல்:** ''அவனை இயக்கும் ஆதார சுருதி- நாகாத்தை, சற்று முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் 'பெய்து' விட்டு கெண்டைக்கால்,வயற்சுழலில் புதைப்புதைய லாவக நடை போட்டுச் சென்றிருந்தாள். அவளுடைய ஒவ்வொரு அடியும் சரவணமுத்துவின் கம்பிப்பருத்த மார்பை தாண்டிக்கொண்டு அவன் இதயத்தின் மீது, மலர்தடத்தை பதித்து விட்டிருந்தது''

- **கதையின் சுவாரஸ்யத்துக்காக தெம்மாங்குப் பாட்டினை உள் நுழைத்துள்ளார்**:நாகாத்தையின் காதலோ, தெம்மாங்கின் அடிகளாக சொட்டுகின்றது. "சரவணமுத்து சத்தம் போட்டுப் பாடிய அந்த வயற்காட்டுத் தெம்மாங்கில் தன்னைப் பறிகொடுத்து விட்டு வந்துகொண்டிருந்தாள் நாகாத்தை... பாம்பால சும்மாடு... படத்தால மொக்காடு!... அப்பப்பா பெருமை அவளுக்குப் பிடிக்கவில்லை."

- **அழுத்தமான காதலைச் சொல்லும் அடர்த்தியான,கம்பீரமான சொற்கள்:**நாகாத்தையின் வடிவத்தை நம் முன் இரத்தமும் சதையுமாக உயிர்பெறச் செய்ய வல்ல வசனங்கள் எம்மை மயக்குகின்றன. "கை என்ற வாழைக்குருத்து ஒய்யார லயத்தோடு வீசித் துவண்ட கோலம், எதேச்சியாக நெற்றியில் விழுந்து கிடந்து கூந்தல் இழைகள், பாதி வயிறு வெளியில் தெரிய முந்தானையை இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த காம்பீர்யம்." என்பது அனுபவமிக்க எழுத்தாளரால்தான் முடியும். கலைத்துவமும் கம்பீரமும் இந்த வர்ணனையில் விரசந் தட்டாமல் ஒரு பெண்ணை எம் முன் நிறுத்தும் கதாசிரியரின் உயிர்த்துடிப்புள்ள எழுத்து.

- **பின்னூட்டல் உத்தி**:நாகாத்தையின் வரவினை கவித்துவமாகக் கூறி,அதில் நாகாத்தை சென்றபின்னர்,சரவணமுத்துவின் செயற்பாடுகளில் நாகாத்தையுடனான உரையாடலை பின்னூட்டல் உத்திமூலம் காண்பிக்கின்றார்.

- **குறியீட்டு உத்தி**: 'வயல் நீரில்' தத்தித்திரிந்த 'பனையான்' 'விரால்' மீன்களை கொத்தித் தின்ன எங்கிருந்தோ ஒரு கூட்டம் 'கொக்குகள்' பிரயத்தனம் செய்து கொண்டிருந்தன. வயல் நிர் - சரவணமுத்துவின் காதல்,மீன்கள் - நாகாத்தை,கொக்குகள் - நாகண்டாப்போடி,தன்காதலியை சரவணமுத்து ரசிக்கும் விதத்தை,தளிர் மேனியை இறுகிப் பற்றியிருந்த சட்டை

- **வினாக்கள் ஊடாக வாசகர்களின் மனதினை வளப்படுத்தல்**:கைமட்டுமா சிவந்தது? மண்வெட்டிக்கு மட்டும்தான் அவன் வேலை வைத்தானா? எனும் வினாக்கள் வெவ்வேறு சிந்தனைகளை ஏற்படுத்த வல்லன.
- **நகைச்சுவை உத்தி**:நாகாத்தை நினைவில் மண்வெட்டியை துர்க்கிக் கொண்டு...

கூத்து சிறுகதையில் ஆசிரியரின் மொழி நடையும் அதன் பொருத்தப்பாடும் :

- கதையின் மையக்கருத்தைத் தானே வெளிப்படையாகக் கூறிக் கதையைத் தொடங்குதல்: இது வ.வே.சு ஐயரின் சிறுகதைத் தொடக்கமுறையை நினைவுபடுத்துகிறது.
- கதைக்கேற்ற சொல்லாட்சிகளை கையாண்டு,பொருத்தமானதும், மொழியழகு மிக்கதுமான வருணனைகளை பயன்படுத்தியிருத்தல்:
  - ≡ "இனிமையான வைகறைப் பொழுதாலோ:வயிற்றை குளுமையாக நிறைத்திருந்த **'தண்ணிச்சோற்றாலோ'** வழமையான வேலை செய்வதால் ஏற்பட்ட'**தெம்பாலோ'**,மட்டும் அவனுக்கு இந்த உற்சாகம் **ஜனிக்கவில்லை".**
  - ≡ "சுழியில் புதைந்த அவளுடைய ஒவ்வோர் அடியும்..... '**பாடு! பாடு!'** என்று பதிலளித்தன"
  - ≡ "சற்று முன்னர் சரவணமுத்து அவளுக்கு கொடுத்திருந்த வாக்குறுதி, அவள் உள்ளத்தில்,வளர்ந்து வரும் கதிர் பறியா வேளாண்மைப் பயிர் போல் பசுமையாக தலையசைத்துக் கொண்டிருந்த வயல்வெளிக்கு சற்றுத் தள்ளி காணப்பட்ட பற்றைக் காட்டின் மத்தியில் ஒரு கூட்டம் தென்னை

மரங்கள். வயல் நீரில் தத்தித் திரிந்த **'பனையான்' விரால்** மீன்களை கொத்தித் தின்ன எங்கிருந்தோ ஒரு கூட்டக் **கொக்குகள்** பிரயத்தனம் செய்து கொண்டிருந்தன''.

- ஊணர்வுகள் உணர்ச்சிகளுக்கு ஏற்றாற்போல மொழி நடைப்பயன்பாடு : நாக்கு விழுந்த நிலையில் சீ,உசார் படுத்தவும் தவற வில்லை,அப்பப்பா! பெருமை அவளுக்குப்பிடிபடவில்லை.
- கதைக்களத்திற்கேற்ற அணிகள், சொல்லாட்சிகள் கொண்ட மொழிநடை: **வயல்**: 'மனவயலைத்தோண்டி','குருத்துக்கை', 'வளர்ந்து வரும் கதிரபறியா வேளாண்மைப் பயிர்போல',**கூத்து**: ''கூத்துக்களரி இரத்தக்களரியானது'', ''தாளக்கட்டு அமர்க்களம் ஓய்கின்றது''
- மட்டக்களப்பு பேச்சு வழக்குச் சொற்களை பயன்படுத்தியிருத்தல்: நாசமறுவான், வயற்காடு, தெம்மாங்கு, தெம்பு, புடிச்சி, தலை, காணி, சும்மாடு, மொக்காடு, தண்ணிச்சோறு, கெண்டைக்கால், நிறகலை, புறக்கி, வழிசல்,நெரி, விட்டிருந்துச்சி, முழுசி, கேஷ், திமுறு,குருத்துக்கை, களரி, கட்டுப் பெட்டி பனையான், அம்பாரை,சீனவெடி.
- கேஸ்,மெயின்,டியூப்பல்ப்,பிளாக்ஸ் முதாலான பழக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியிருத்தல்.
- வினாக்களின் உபயோகம்:விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஈடுகொடுக்க முடியுமா? கைமட்டுமா சிவந்தது?
- தமிழ்மொழியில் வந்து கலந்து பெருவழக்குப் பெற்றுவிட்ட வடசொற்களை ஆங்காங்கே தமிழோடு இணைத்துப் பயன்படுத்தியிருத்தல் : சங்கதி, நியதி, ஜனிக்கவில்லை, காரணம், சுருதி,சரம், சங்கீதம், லாவகம், பிரயத்தனம், திருஷ்டி, காம்பீர்யம், கவசம், நிஜம்,தாலி, கலவரம்,கல்யாணம்,பாசுபதம், ரகசியம்,கெதியில்,ஞாபகம்,கணம், விபத்து,கரம்,பிரதாபம்,வேஷம்.
- மரபுத்தொடர்களைப் பயன்படுத்தியிருத்தல்:கைகலப்பு
- சிறு சிறு வசனங்களைக் கையாண்டு கதையினை நகர்த்திச் செல்கின்றனர்:
- உரையாடல் பாங்கான தன்மையில் கதையினை நகர்த்திச் செல்கின்றார்:
- உவமைத் தொடர்களைக் கையாண்டுள்ளமை: அவள் உள்ளத்தில்,வளர்ந்து வரும் கதிர் பறியா வேளாண்மைப் பயிர் போல் பசுமையாக தலையசைத்துக் கொண்டிருந்த வயல்வெளி.
- இலக்கியவழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இருவகைக் சொற்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துதல்:இந்த நியதிக்குச் சரவணமுத்துவே இதோ ''சாலுங் கரியார்'' இருக்கிறார் - இலக்கியவழக்கு,''அந்தபுரத்தில் தான் இவ்வளவு நாளாக வாய்ச்சேட்டையோடு அந்த வழிகள் விட்டிரிச்சி''- பேச்சு வழக்கு.
- தான் அழுத்தம் கொடுக்க விரும்பும் விடயத்தை பொருத்தமான மேற்கோட்குறியில் இடுதல்:அதற்கு வேறு ஒரு 'காரண'மும் இருந்தது.சற்று நேரத்துக்கு முன்னர் தான் சங்கீதத்தை அவன் செவிகளில் பெய்து விட்டு...

'கூத்து'சிறு கதையில் காணப்படும் பண்பாட்டம்சங்கள்

- ஆண்கள் வயற்காட்டில் வேலை செய்தல்
- வேலையில் ஈடுபடும் போது தெம்மாங்கு பாடுதல். அதன் மூலம் பாரம்பரியமான இசை வடிவத்தினை வெளிக்கொணர்தல்.
- அதிகாலைப் பொழுதில் தண்ணீர் கலந்த பழைய சோற்றை உண்டு விட்டு வேலைக்கு உற்சாகமாக செல்லுதல்.
- இளம் வாலிபர்களும், இளம்பெண்களும் காதலில் ஈடுபட்டு மகிழ்தல், காதல் கனிந்து கல்யாணத்தில் முடிதல்.

- கிராமங்களில் கோயில் முன்றலில் கூத்துக்களரி அமைக்கப்பட்டு கூத்து நடைபெறல்.
- புராண - இதிகாச கதை தழுவிய கூத்துக்களில் உழைப்பாளி மக்கள் பாத்திரமேற்று நடித்தல்.
- பெண்கள் கண்ணாடி வளையல்கள் அணிந்திருத்தல்: சேலை, சட்டை உடுத்துதல்: கொண்டை போட்டிருத்தல்: முக்காடு போடுதல்:
- பனையோலை பெட்டிக்குள் வைத்து வேலைத்தளங்களுக்கு உணவெடுத்துச் செல்லல்.
- ஆண்கள், சால்வை அணிதல், வேலை செய்யும் போது சால்வையை மடித்து தலையில் கட்டல்.
- மதுபானம் (சாராயம்) அருந்துபவர்களும் காணப்படுதல்.

இச்சிறு கதையில் காணப்படும் அணிகள்:

- **உவமையணி:**

≡ கவசம் போல் காத்து நின்ற முக்காடு: கொண்டையை மூடிநின்ற முக்காடு. அதனைக் காக்கும் கவசம் போன்றதாக உவமிக்கப்படுதல்.

≡ தளிர்மேனி: நாகாத்தையின் உடல் வர்ணனை தளிர் போன்ற மேனி எனப்படுதல்.

≡ வளர்ந்துவரும் கதிர்பறியா வேளாண்மைப் பயிர்போல:

≡ குருத்துக்கை :

≡ மலர்த்தடம்:

- **உள்ளுறை உவமம்:**பனையான விரால் மீன்களைக் கொத்தித் தின்ன கொக்குகள் காத்திருப்பதாக கூறும் பகுதி.
- **உருவகம்:**

≡ நெஞ்சுக்களரி:நெஞ்சிற்கு களரியை உருவகித்துள்ளார்.(களரி - கூத்தரங்கு)

≡ மன வயலைத் தோண்டி : மனமாகிய வயல் - மனதை வயலுக்கு உருவகித்துள்ளார்.

≡ வரம்போ தலகணி:

≡ உலகமேடை:

≡ விஜயனின் வில்லாக:

≡ அவனை இயக்கும் ஆதார சுருதி:

≡ கை என்ற வாழைக் குருத்து:

≡ நினைவு மண்வெட்டி:

சிறு கதையாசிரியரின் மேலான கற்பனை:

- வயற் காட்டில் தன்னுடன் இனிமையாக அளவளாவி விட்டு நீர் நிறைந்த வயற்சுழிகளினுடாக கால்கள் புதைய நடந்து செல்லும் நாகாத்தையின்நடை,பாவனைகளைக் கண்ணுற்ற சரவணமுத்துவின் காதல் வசீகரமும் கற்பனையும்.
- கூத்துக்களரியில் அண்ணாவியாரும், இசைக்கலைஞர்களும், நடிகர்களும், பார்வையாளர்களும் செயற்பட்ட விதங்கள்.
- கூத்தின் போது விஜயனுக்கும் வேடனுக்கும் நடந்த இறுதி யுத்தமும் விளைவும்

இம் மூன்று கட்டங்களிலும் சிறு கதையாசிரியரின் மேலான கற்பனை, யதார்த்தத்துடன் இணைந்து சிறகடித்துப் பறந்துள்ளது.

கதையூடாக வெளிப்படும் அக்காலக் கூத்தாட்ட நடைமுறைகள் பற்றிய சித்திரிப்பு:

- புராண - இதிகாசக் கதைகளே பெரும்பாலும் கூத்தில் நடிக்கப்படும்.
- உள்ளூரவர்கள் கலைஞர்களாக கூத்தில் நடிப்பார்கள்.
- ஊரிலுள்ள எல்லோரும் கூத்து நிகழ்வினைப் பார்ப்பதற்காகச் செல்லுதல்: கூத்துக்களரியைச் சூழ்ந்து மணல் தெரியாத அளவுக்கு நிறைந்திருப்பார்கள்.
- வட்டக்களரி மேடையமைப்பைக் கொண்டதால், சுற்றிவரப் பார்வையாளர்கள் வீற்றிருக்கும் வகையில் மணல் பரவிய தாய் கூத்துக் களரி காணப்படும்.
- பந்தங்களின் வெளிச்சத்தில் கூத்து நடைபெற்ற காலத்தைப் போல் அல்லாது, மின்சார டியூப்லைற்றுக்களின் வெளிச்சத்தில் கூத்து நடைபெறும்.
- கிராமங்களிலே பொது இடங்களிலோ,கோயில் முன்றில்களிலோ, வீதிகளிலோ கிராமங்களில் கூத்து கிராமங்களில் விடிய விடிய நடப்பது வழமையாகும்.
- 'களரி','உறங்காமல்' இருப்பதற்காக (இரசிகர்கள் உற்சாகமடைய) அண்ணாவியரும் அவரது கோஷ்டியாளரும மத்தளத்தின் மூலம் இனிய சங்கதிகள் இசைக்கப்படும்.
- அண்ணவியாரும், அவரது இசைக்கோஷ்டியினரும் பழைய நாடகத்தில் இருந்து துள்ளல் மெட்டில் பாடல்களைப் பாடுவார்கள்.
- கதாப்பாத்திரங்கள் முதலில் மேடைக்கு வரும் பொழுது வெள்ளைச் சால்வையை திரையாக விரித்து மறைத்துப் பிடிப்பார். பின்னர் படிப்படியாக மறைப்பு நீக்கப்படும்.
- கூத்துஆரம்பிக்கும் நிகழ்வுகள்:மத்தாப்பு கொழுத்துவது,சீன வெடி கொழுத்துவது,கட்டியக்காரன் வரவு முதலில் இடம் பெறுவது,பாத்திரங்கள் தம்மைத் தாமே அறிமுகம் செய்வது.முக்கியமான கதாப்பாத்திரங்கள் அறிமுகம் ஆகும் போது பகல் வெற்றி கொழுத்தப்பட்டுக் களரிக்கு வெளியில் சீன வெடிகள் முழங்கும்.
- கட்டியக்காரன் என்கிற 'பபூன்' கதாப்பாத்திரம் சிரிப்பை வரவழைக்கும் ஏனைய கதாப்பாத்திரங்களை அறிமுகப்படுத்தவும், காற்சலங்கை ஒலிக்க தாலக்கட்டுடன் ஆடுவதை கூத்தில் காணலாம்.
- மத்தளம், சல்லாரி ஆகிய இசைக்கருவிகள் கூத்தின் போது பயன்படுத்தப்படுகின்றன.
- பாடியாடிக்கொண்டு கதாப்பாத்திரங்கள் களரியில் அறிமுகம் ஆகும் போது, அதில் கூத்தாடி நடிப்பவரின் நண்பர்களும் உறவினர்களும் களரிக்குள் புகுந்து கடதாசி மாலைகள், சிலர் சால்வையை இடுப்பிலும் கட்டி விடுவர்; சிலர் கலைஞர்களை உஷார்ப்படுத்த பிளாக்ஸிலிருந்து அம்பாரையை ஊற்றியும் கொடுப்பர்.
- அண்ணாவியாரின் தாலாட்டுக்கேற்ப களரியில் நடிப்பவர்கள் பாட்டிலும், ஆட்டத்திலும், தத்தம் திறமையைக் காட்டுவார்கள்.

'கூத்து'கதைத்தலைப்பின் பொருத்தப்பாடு:

- கூத்து என்னும் தலைப்பு இச்சிறு கதைக்கு மிகவும் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தன்னுடைய கருத்தினை உள்ளூரில் நிகழும் கலை நிகழ்வான 'கூத்து'என்னும் நிகழ்வினைக் கொண்டு வெளிப்படுத்துவதினாலும், கதையின் தொடக்கம் முதல் முடியும் வரையும் கூத்து நிகழ்வு என்னும் கலை விபரிப்பின் மூலம் கதையினை நகர்த்திச் செல்வதினாலும், சமூகப்பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கு கூத்து நிகழ்வினை கையாள்வதன் மூலமும் இத்தலைப்புப் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றது.
- கூத்துக் களரியினூடாக கதை நகர்வதால் 'கூத்து' என்கிற தலைப்புப் பொருத்தமுற அமைகிறது. நேரடிப் பொருளில் கூத்து என்ற கலை வடிவத்தினூடாகச் 'சுபத்திரை கல்யாணம்' விவரிக்கப்படும்

அதேவேளை கூத்தாக அமையும் நடைமுறை வாழ்க்கையையும் மறைமுகமாக இணைத்துக் கதை கூறும் உத்தி.

- கூத்து என்பது நடைமுறையில் கலைவடிவம் என்ற கருத்தைத் தாண்டி அபத்தம்,அவலம்,அசாதாரணம், ஆகியகருத்துக்களையும்உடையது.(ஊழிக்கூத்து,ஆரியர்கூத்து,சரியானகூத்துத்தான்,நல்லகூத்து, என்ன கூத்தடிக்கிறீங்க..) இந்தக் கதையின் முடிவும் கூத்தாக (அவலமாக) முடிவதை மறைமுகமாகக் கூறல்.
- கதை முடிவில் ஆசிரியர் கூற்று: நாகாண்டப் போடி உலக மேடையில் கூத்து ஆடுவதற்காகத் தான் போட்ட 'மனித வேஷத்தை'க் கலைத்துவிட்டு இந்த உலகத்தையே விட்டுச் சென்றுவிட்டான் உலகமேடையில் கூத்தாடுவதற்காகப் புதிதாக ஒரு வேஷத்தை போட்டுக்கொண்டு நின்றான் சரவணமுத்து! அவன் ஏற்க இருக்கும் பாத்திரம் குற்றவாளி!நாகாத்தையும் கூத்தாட தயாராகிக்கொண்டுதான் இருக்கிறாள்.அவள் ஏற்க இருக்கும்பாத்திரம்-கண்ணிர் நிறைந்தது!
- கதை கூத்துக் கலைஞர்களோடும், கூத்துக்களரியோடும், கூத்தாட்டத்தோடும் சம்பந்தப்பட்ட வகையில் அமைதல்.
- கூத்து மேடையில் கூத்தர்கள் வேறுவேறு நாடகங்களில் வேறுவேறு பாத்திரங்களைஏற்பார்கள். வேறுவேறு ஒப்பனை செய்வார்கள்.
- வாழ்க்கை எனும் மேடையாலும் மனிதர்கள் தங்கள் ஆசாபாசங்களாலும் அவற்றின் காரணமான நடவடிகைகளாலும் வேறுவேறு நிலமைகளுக்கு ஆளாக நேரிடுகிறது.''நாடகமே உலகு'' என்ற அறிஞர் வாக்கு நிதர்சனமாகிறது.
- கூத்துக் களரியின் சித்திரிப்பு: கோவில் வீதியின் மத்தியில் குடைவிரித்து நின்றது கூத்துக்களரி. புதுமை புலப்படுத்தல்:- பழைய காலம் போல் - 'களரி'யைச் சுற்றி, வாழைக்குற்றியில் பந்தம் எரியவில்லை. - டியூப் 'பல்ப்பு'கள் தாம் 'எரிந்து'கொண்டிருந்தன.
- கூத்துக் கலை வடிவத்திற்கான வரவேற்பு: களரியைச் சுற்றி மணல் தெரியாத அளவிற்கு ரசிக கோடிகள் குழுமியிருந்தனர்.
- சிறுகதையின் இறுதியில் கூத்துப்பற்றி சிறுகதை ஆசிரியரே இதற்குப் பதில் கூறுகின்றார்:
  - ≡ உலகைக் கூத்து மேடையாகவும் மனிதர்களை வேடமிடும் கூத்துக்காரர்களாகவும் சுட்டுகின்றார்.நாகண்டாப்போடி உலக மேடையில் கூத்து ஆடுவதற்காக தான் போட்ட மனித வேசத்தை கலைத்து விட்டு... என்கிறார்.
  - ≡ கூத்தில் எவ்வாறு ஒருமனிதர் பல்வேறு வேடங்களை பொட்டு ஆடக்கூடிய வாய்ப்பு இருக்கிறதோ அவ்வாறே மனிதர்களது இயல்புமாற்றங்களினால் வேடமாற்றங்களும் இடம்பெறலாயிற்று:
  - ≡ ஊலக மேடையில் கூத்தாடுவதற்காக புதிதாக ஒருவேசத்தை போட்டுக் கொண்டு நிற்கின்றான் சரவணமத்து.அவன் ஏற்க இருக்கும் பாத்திரம் குற்றவாளி!
  - ≡ நாகாத்தையும் கூட தயாராகிக்கொண்டுதான் இருக்கிறாள்.அவள் ஏற்க இருக்கும் பாத்திரம் கண்ணீர் நிறைந்தது.
- எமது கருத்திற்கேற்பவே கூத்தில் எமக்குரிய பாத்திரம் நிர்ணையிக்கப்படகின்றது.அதுபோலவே எமது நடத்தைகள் இயல்புகள் என்பவற்றினால் உலகில் எமது வேடம் நிர்ணையிக்கப்படுகின்றது.

கூத்து சிறுகதையில் வெளிப்படும் படிப்பினைகள்:

- நமக்குரிய பிரச்சினைகளை உரிய முறையில் பக்குவமடைந்த உரிய நபரிடம் கூறுவதே பிரச்சினைக்குத் தீர்வைத் தரும்.
- ஒருவரால் பிரச்சினைகள் இழைக்கப்படும்போது அதனை ஆரம்பத்திலேயே தடுத்துக் கொள்ளல் வேண்டும்.

- தம்மை விரும்பாத பெண்ணையோ பிறனுக்குரிய மனைவியையோ காதலியையோ தம் ஆசைக்காகப் பயன்படுத்த நினைப்பது கொலையில் முடியும்.
- தனிப்பட்ட விருப்பு வெறுப்பை வெளிப்படுத்த கலையை தவறாகப் உபயோகிக்கக்கூடாது.மீறினால் தம்மைச் சார்ந்த சாதாரண சமூகத்திற்கு பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தும்.
- தூரநோக்கற்ற செயல்கள் பழிவாங்கல்கள் பலரின் துன்பத்துக்குக் காரணமாக அமைந்து விடும்.
- போதைப் பொருள் பாவனையில் பாதக விழைவுகளே அதிகம்: கூத்துக்கலை நிகழ்த்துகையிலும் பிறநேரங்களிலும் இப்பாவனையின் விளைவுகள் பாரதூரமானவை.

நவத்தின் 'கூத்து'சிறு கதை னி மாதிரி வினாவிடை 2020

01.நவத்தின், 'கூத்து'சிறு கதை வெளிப்படுத்தும் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுக.

(அ) நாகண்டானுக்கு நாகாத்தை மீது காதல் ஏற்பட்டைக்ககான காரணமும் அது காமமாக மாறியமையையும் கதாசிரியர் சித்திரிக்குமாறும்

(ஆ) சமூக – கலைப் பண்பாட்டம்சங்கள்

(இ) வெளிப்படும் படிப்பினைகள்

(ஈ) 'கூத்து' கதைத்தலைப்பின் பொருத்தப்பாடு

01. நவத்தின், 'கூத்து'சிறு கதையில் வெளிப்படும் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுக.

(அ) நாகண்டானுக்கு நாகாத்தை மீது காதல் ஏற்பட்டைக்ககான காரணமும் அது காமமாக மாறியமையையும் கதாசிரியர் சித்திரிக்குமாறும்

- **நாகாத்தை மீது காதல் ஏற்பட்டைக்ககான காரணம்:**

≡ **நாகாத்தையயின் வசீகரத்தோற்றம்**: தளிர்மேனி, கைவாழைக்குருத்து, லாவக நடை,எதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள்,முக்காடு,பாதிவயிறு வெளியில் தெரிவது என்பவை நாகத்தையை நாகண்டான் ஒருதலையாக விரும்பியமைக்கான அடிப்படைகயாகும்.

≡ **பாலியல் சேட்டைகளுக்கு இடங்கொடாத அவளின் இறுக்கமான தன்மை:** வயற் காட்டில் அவனுடன் உரையாடி விட்டுத் திரும்புகையில் தன்மீது ஒருதலையாகக் காதல் கொண்டிருந்த நாகண்டான் கையைப் பிடித்திழுக்கத் திமிறி விடுவித்துக்கொண்டு ஓடிச்சென்று சரவணமுத்துவிடம் நடந்தவற்றைக் கூறியவள். அத்தோடு நாகண்டான் தனது கையைப் பிடித்திருந்தபோது அவளது இயல்பில் மாற்றங்கள் தோன்றியமையையும் ஆசிரியர் சுட்டிக்காட்டல்:கைமட்டுமா சிவந்தது (கோபத்தாலும்,வெறுப்பாலும் அருவருப்பாலும்,பயத்தாலும்) கண்களும்தாம் சிவந்திருந்தன என்பது.

≡ **நாகாத்**தை சரவணமுத்துவின் காதல் மிக வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்ததுடன் இருவரும் இருதலையாக மிக நெருக்கமாக அவர்கள் வயற்காட்டிலும் பழகித்திரிந்தமையை நாகண்டான் நேரடியாக அறிந்திருந்தமை:

≡ **நாகண்**டானுக்கு நாகாத்தை மீது ஒருகண் என்றும் அவர்களது காதல் காம விவகாரம் ஊரறிந்த ரகசியம் என்கதாசிரியர் கூறும் கூறும் கூற்றுக்களும் நாகண்டானுக்கு தைரியத்தை ஏற்படத்தியமை:

- **காமமாக மாறியமை:**

≡ மது போதையில் தன்னை மறந்து செயற்பட்டு,நாகாத்தையிடம் பாலியல் சேட்டைகள் பண்ணியமை:

≡ வயற்காட்டில் தனது காதலுனுடன் உரையாடிவிட்டு திரும்பிய நாகாத்தையின் கையைப் பிடித்து இழுத்தவன்.இதனால் நாகாத்தையால் 'புறக்கி', 'வழிசல்', 'நாசமறுவான்' போன்ற அவதூறான

சொற்களால் திட்டப்பட்டு பின்பு நாகாத்தையின் காதலன் சரவணமுத்துவின் கடுங்கோபத்திற்கும் ஆளானமை:

≡ நாகண்டான் நாகாத்தைமீதான வல்லாண்மையை நாகாத்தை ஊடாகவே சித்திரித்தமை: 'வாய்ச்சேட்டை','கைச்சேட்டை' என்றும் அவற்றை விபத்து என்றும் குறிப்பிட்டமை.

≡ குடிபோதையில் நிறைகலையில் விழுந்து கிடக்கும் நாகண்டான் தன்னை நாகாத்தையிடம் பறிகொடுத்து விட்டதாக உழறுவது.

≡ நாகண்டான் நாகாத்தையை, ''இப்பதான் வாறியா'' எனக்கேட்பது:இவளவு நேரமம் நாகாத்தை சரவணமுத்துவிடம் காதல் சல்லபத்தில் ஈடுபட்டமை நாகண்டானின் காமத்தக்கு காரணமாதல்.

≡ நாகண்டானின் காமச்சேட்டையை கதாசிரியர் த்ததுவரூபமாக சித்திரிப்பது: ஒருவலுவான கரம் அவளது கரத்தை அழுத்தி பிடித்து நிறுத்திக் கொண்டிருந்தது என்பதும்நாகாத்தை 'ஆய்' 'சீ' என அருவருப்பான உடன்பாடற்ற வார்தைப்பிரயோகங்களை பிரயோகிப்பது.

≡ நாகாத்தையின் குருத்துக்கை சிவப்பது,கண்களும் (கோபத்தாலும்,வெறுப்பாலும் அருவருப்பாலும்,பயத்தாலும்)சிவப்பது. நாகாத்தை நாகண்டானிடமிருந்து தப்பிப்பது:

≡ முக்கியத்துவம்:காலகாலமாக ஆண் மேலாதிக்கச் சிந்தனையின் வழி வந்தவனாக, அவனைக் காண்பிக்கின்றது. களரி மேடையில் சுவாரசியமான நிகழ்வுகள், கதையோட்டத்துடன் இயைந்து சுவையூட்டுகின்றன.

≡ கூத்துக்களரியில் தன்னிலை மறந்த சரவணமுத்துவின் வில்லால் தாக்கப்பட்டு உயிர் துறக்கமளவிற்கு அவனது காதல் காமமாக மாறியிருந்தது.

(05 புள்ளிகள்)

<u>(ஆ)சமூக – கலைப் பண்பாட்டம்சங்கள்</u>

- ஆண்கள் வயற்காட்டில் வேலை செய்தல்:
- அதிகாலைப் பொழுதில் தண்ணீர் கலந்த பழைய சோற்றை உண்டு விட்டு வேலைக்கு உற்சாகமாக செல்லுதல்:
- இளம் வாலிபர்களும், இளம்பெண்களும் காதலில் ஈடுபட்டு மகிழ்தல், காதல் கனிந்து கல்யாணத்தில் முடிதல்,காதலுக்கான சவால்கள்:
- பெண்கள் கண்ணாடி வளையல்கள் அணிந்திருத்தல்: சேலை, சட்டை உடுத்துதல்: கொண்டை போட்டிருத்தல்: முக்காடும் போடுதல்:
- ஆண்கள், சால்வை அணிதல், வேலை செய்யும் போது சால்வையை மடித்து தலையில் கட்டல்:
- பனையோலை பெட்டிக்குள் வைத்து வேலைத்தளங்களுக்கு உணவெடுத்துச் செல்லல்:
- மதுபானம் (சாராயம்) அருந்துபவர்களும் காணப்படுதல்:

≡ வேலையில் ஈடுபடும் போது தெம்மாங்கு பாடுதல். அதன் மூலம் பாரம்பரியமான இசை வடிவத்தினை வெளிக்கொணர்தல்:

≡ கிராமங்களில் கோயில் முன்றலில் கூத்துக்களரி அமைக்கப்பட்டு கூத்து நடைபெறல்:

≡ புராண - இதிகாச கதை தழுவிய கூத்துக்களில் உழைப்பாளி மக்கள் பாத்திரமேற்று நடித்தல்:

(05 புள்ளிகள்)

<u>(இ)வெளிப்படும் படிப்பினைகள்:</u>

- நமக்குரிய பிரச்சினைகளை உரிய முறையில் பக்குவமடைந்த உரிய நபரிடம் கூறுவதே பிரச்சினைக்குத் தீர்வைத் தரும்:
- ஒருவரால் பிரச்சினைகள் இழைக்கப்படும்போது அதனை ஆரம்பத்திலேயே தடுத்துக் கொள்ளல் வேண்டும்:

- தம்மை விரும்பாத பெண்ணையோ பிறனுக்குரிய மனைவியையோ காதலியையோ தம் ஆசைக்காகப் பயன்படுத்த நினைப்பது கொலையில் முடியும்:
- தனிப்பட்ட விருப்பு வெறுப்பை வெளிப்படுத்த கலையை தவறாகப் உபயோகிக்கக்கூடாது.மீறினால் தம்மைச் சார்ந்த சாதாரண சமூகத்திற்கு பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தும்:
- தூரநோக்கற்ற செயல்கள் பழிவாங்கல்கள் பலரின் துன்பத்துக்குக் காரணமாக அமைந்து விடும்:
- போதைப் பொருள் பாவனையில் பாதக விழைவுகளே அதிகம்: கூத்துக்கலை நிகழ்த்துகையிலும் பிறநேரங்களிலும் இப்பாவனையின் விளைவுகள் பாரதூரமானவை:

(05 புள்ளிகள்)

(ஈ)கதைத்தலைப்பின் பொருத்தப்பாடு

- கூத்து என்னும் தலைப்பு இச்சிறு கதைக்கு மிகவும் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தன்னுடைய கருத்தினை உள்ளுரில் நிகழும் கலை நிகழ்வான 'கூத்து'என்னும் நிகழ்வினைக் கொண்டு வெளிப்படுத்துவதினாலும், கதையின் தொடக்கம் முதல் முடியும் வரையும் கூத்து நிகழ்வு என்னும் கலை விபரிப்பின் மூலம் கதையினை நகர்த்திச் செல்வதினாலும், சமூகப்பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கு கூத்து நிகழ்வினை கையாள்வதன் மூலமும் இத்தலைப்புப் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றது.
- கூத்து எனும் கலைவடிவச் சொல்லாடல் பல்வேறு பொருள்களில் சமூகமட்டத்தில் பேசப்படும்: ''நல்ல கூத்திது'', ''எத்தின நாளா இந்தக்கூத்து நடக்குது'', ''என்ன கூத்துக்காடுறீங்க'', ''அவங்கட கூத்தப்பற்றித்தான் ஊருக்குள்ள கத'', ''சுபத்திலை கல்யாண கூத்துக்கள்ள இவங்கட கூத்து வேற''
- கூத்துக்கலைவடிவமே மக்களின் வாழ்வாகவும் காதலாகவும் கொலையாகவும் இச்சிறுகதையில் நகர்த்தப்பட்டிருப்பது:
- சிறுகதையின் இறுதியில் கூத்துப்பற்றி சிறுகதை ஆசிரியரே இதற்குப் பதில் கூறுகின்றார்:
  - ≡ உலகைக் கூத்து மேடையாகவும் மனிதர்களை வேடமிடும் கூத்துக்காரர்களாகவும் சுட்டுகின்றார்.நாகண்டாப்போடி உலக மேடையில் கூத்து ஆடுவதற்காக தான் போட்ட மனித வேசத்தை கலைத்து விட்டு... என்கிறார்.
  - ≡ கூத்தில் எவ்வாறு ஒருமனிதர் பல்வேறு வேடங்களை போட்டு ஆடக்கூடிய வாய்ப்பு இருக்கிறதோ அவ்வாறே மனிதர்களது இயல்புமாற்றங்களினால் வேடமாற்றங்களும் இடம்பெறலாயிற்று:
  - ≡ ஊலக மேடையில் கூத்தாடுவதற்காக புதிதாக ஒருவேசத்தை போட்டுக் கொண்டு நிற்கின்றான் சரவணமத்து.அவன் ஏற்க இருக்கும் பாத்திரம் குற்றவாளி!
  - ≡ நாகாத்தையும் கூட தயாராகிக்கொண்டுதான் இருக்கிறாள்.அவள் ஏற்க இருக்கும் பாத்திரம் கண்ணீர் நிறைந்தது.
- எமது கருத்திற்கேற்பவே கூத்தில் எமக்குரிய பாத்திரம் நிர்ணையிக்கப்படகின்றது.அதுபோலவே எமது நடத்தைகள் இயல்புகள் என்பவற்றினால் உலகில் எமது வேடம் நிர்ணையிக்கப்படுகின்றது.

(05 புள்ளிகள்)